**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 56/2014**

**2025 ம் ஆண்டு செப்டம்பர்-20 ம் நாள் சனிக்கிழமை**

1969 ம் ஆண்டு 44 வது பிரமாண சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திருமதி.K.ரேணுகாதேவி, பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி,, அவர்கள் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் :சிலம்பரசன்(Pw1)

தந்தை பெயர் : வெங்கடேசன்

கிராமம் : அழகப்பசமுத்திரம்

வயது : 32

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனது முதன்மை சாட்சியமாக எடுத்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன். சாட்சி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அவரது முதன்மை சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

1. கடந்த 06.06.1942 தேதியிட்ட நடராஜா படையாட்சியிடம் இருந்து எனது கொள்ளுப்பாட்டி அன்னம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**

2. கடந்த 03.12.2013 தேதியிட்ட எனது பாட்டி தனலட்சுமி அம்மாள் பேரில் உள்ள அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் -**வா.சா.ஆ.2**

3. கடந்த 20.01.2014 தேதியிட்ட எனது பாட்டி தனலட்சுமி பேரில் உள்ள பட்டாவின் சான்றிட்ட நகல் - **வா.சா.ஆ.3**

4. கடந்த 13.02.1973 தேதியிட்ட எனது பாட்டி எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தின் சான்றிட்ட நகல்-**வா.சா.ஆ.4**
5. கடந்த 07.01.2014 தேதியிட்ட அடமான கடன் வரவு ரசீது அசல்-**வா.சா.ஆ.5.**

6. கடந்த 23.03.2006 தேதியிட்ட என்னுடைய தந்தை வெங்கடேசன் பேரில் கொடுக்கப்பட்ட கிஸ்து ரசீது -**வா.சா.ஆ.6.**
7. கடந்த 09.10.2013 தேதியிட்ட எனது பேருக்கு எனது தந்தை எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணம் **வாசாஆ.7.**
8. கடந்த 03.03.2014 தேதியிட்ட எனது பேரில் உள்ள அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் **வாசாஆ.8.**
9. கடந்த 03.03.2014 தேதியிட்ட எனது பேரில் உள்ள பட்டாவிற்கான சான்றிட்ட நகல் **வாசாஆ.9.**
10. கடந்த 24.01.2014 தேதியிட்ட எனது பேரில் வழங்கப்பட்ட பட்டாவிற்கான சான்றிட்ட நகல் **வாசாஆ.10.**
11. கடலூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி விவசாய கடனை தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழின் அசல் **வாசாஆ.11.**

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**